**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் திங்கள்கிழமை**

**I.A. No.318/2025**

**in**

**OS.No.823/2024**

**(CNR.NO. TNVP02-000357-2024)**

பாலசுப்ரமணியன் .... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

நடராஜ் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 23.06.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 13.08.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.வெங்கடேசபெருமாள், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.துரைபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு கட்டளை 8 விதி 1(A)3-சி.பி.சி-யின் கீழ் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து தற்போது மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய அனுமதி கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் இம்மனுவில் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர், மனுதாரர் பெயரில் பண வசூலுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் வாதியின் வழக்கறிஞர் 11.02.2019 அன்று மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் 27.02.2012ல் தான் வாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரிநோட் ஆகிய ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்யும் மேற்படி ஆவணங்களை ரிசீவ் செய்து தன் தரப்பில் குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும் என்றும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு சுத்த தப்பும் பொய்யும், மோசமுமானது சட்டப்படி ஏற்புடையதல்ல இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும், உண்மையில் மனுதாரர்/பிரதிவாதி இம்மனு மூலம் காலதாமதமாக தாக்கல் செய்வதாய் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் வழக்கு தாக்கல் காலத்தில் இருந்தும் அதனை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது காலம் கடந்து தாக்கல் செய்வதற்கு குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிராமிசரி ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிராம்சரி நோட்டு தொடர்பான அறிவிப்பில் ரூ.92,000/-ம் தொகையை பைசல் செய்ய வேண்டிதான் வழக்கறிஞர் அறிவிப்பு வாசகங்களில் குறிப்பு உள்ளதே தவிர மனுதாரர் கூறுவதுபோல் ரூ.50,000/-ம் தொகையை கோரி அறிவிப்பு இல்லை என்றும், பிராமிசரி நோட்டில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும் முரண்பாடு உள்ளதால் மேற்படி ஆவணம் இந்த அசல் வழக்கிற்கு ஏற்புடைய ஆவணம் இல்லை என்றும், தாவா

புரோநோட்டு ஏற்பட்ட தேதிக்கு 29.04.2016க்கும் 27.12.2012 தேதிக்கும் முரண்பாடு உள்ளது என்றும், கடந்த 27.12.2012 தேதியில் கடன் தொகை பைசல் செய்தால் பைசல் ரசீது ஏன் இல்லை என்றும், பொதுவாக பைசல் செய்யப்படும் போது பிராமிசரிநோட்டின் ஸ்டாம்பு பகுதி மட்டும் கிழிக்கப்படும் என்றும், அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிராமிசரி நோட்டில் எங்கும் கிழிக்கப்படவில்லை என்பதால் இந்த எதிர்மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்தில் பிராம்சரி நோட்டு போர்ஜரியாக தயாரிக்கப்பட்டுள்ளதால் அது நம்பகத்தன்மையை இழந்து ஏற்புடையதாற்றதாகிவிட்டது என்றும், தாவா பிராமிசரி நோட்டு தொடர்பான ஆவணம் தோற்றுவித்தலில் அதாவது ஏற்படுத்துதல் மற்றும் உருவாக்குதலில் பிரதிவாதியின் பங்களிப்பே அவசியமும், முக்கியமும் ஆனது ஆகும் என்றும், மனுதாரரே கையொப்பம் போட்டு அசல் வழக்கின் எதிர் நடவடிக்கைக்காக உருவாக்கிய ஆவணத்தையே தற்சமயம் தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா பிராமிசரி நோட்டு ஆவணத்தில் ஒரு கையெழுத்தும், மனுதாரர் தற்சமயம் உருவாக்கிய பிராமிசரி நோட்டு ஆவணத்திலும் வெவ்வேறு நபர்களின் கையொப்பம் உள்ள நுணுக்கங்களை அறியாமல் தயார் செய்த ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தை எழுத்து மூலமான ஆட்சேபனையுடன் தாக்கல் செய்யாத காரணத்தையும், காலதாமதத்திற்கான விளக்கத்தையும் மனுதாரரே நிரூபனம் செய்ய வேண்டும் என்றும், இந்நிலையில் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அது தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>தீர்வுக்கான பிரச்சினை :-</u>**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**6. <u>தீர்வு :-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரா் தரப்பில் மனுதாரரின் வழக்கறிஞா் தனது வாதுரையில் மேற்படி அசல் வழக்கில் வாதியின் வழக்கறிஞா் 11.02.2019 அன்று மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞா் அறிவிப்பு மற்றும் 27.02.2012ல் தான் வாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரிநோட் ஆகிய ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்யும் மேற்படி ஆவணங்களை ரிசீவ் செய்து மனுதாரா் தரப்பில் குறியீடு செய்யக்கோரி வாதிட்டார்.

8. எதிா்மனுதாரா் தரப்பில், எதிா்மனுதாரரின் வழக்கறிஞா் தனது வாதுரையில் மனுதாரா் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பொருந்தாது என்றும், மனுதாரரே கையொப்பம் போட்டு அசல் வழக்கின் எதிா் நடவடிக்கைக்காக உருவாக்கிய ஆவணத்தையே தற்சமயம் தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா பிராமிசரி நோட்டு ஆவணத்தில் ஒரு கையெழுத்தும், மனுதாரா் தற்சமயம் உருவாக்கிய பிராமிசரி நோட்டு ஆவணத்திலும் வெவ்வேறு நபா்களின் கையொப்பம் இருப்பதால், மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அது தள்ளுபடி செய்யப்படவேண்டும் வாதிட்டார்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரா் தரப்பில் வாதியின் வழக்கறிஞா் 11.02.2019 அன்று மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞா் அறிவிப்பு மற்றும் 27.02.2012ல் தான் வாதிக்கு எழுதிக்கொடுத்த பிராமிசரிநோட் ஆகிய ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னிக்க கோரியும், ஆவணங்களை குறியீடு செய்யக்கோரியும் கூறியுள்ளார். எதிா்மனுதாரா் தரப்பில் மனுதாரா் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பொருந்தாது என்றும், எதிா்மனுதாரா், தரப்பில் மனுதாரரே கையொப்பம் போட்டு அசல் வழக்கின் எதிா் நடவடிக்கைக்காக உருவாக்கிய ஆவணத்தையே தற்சமயம் தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா பிராமிசரி நோட்டு ஆவணத்தில் ஒரு கையெழுத்தும், மனுதாரா் தற்சமயம் உருவாக்கிய பிராமிசரி நோட்டு ஆவணத்திலும் வெவ்வேறு நபா்களின் கையொப்பம் இருப்பதாகவும், கூறியுள்ளார்.

10. இம்மனுவில் மனுதாரர் தற்போது கூடுதல் ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளதை பார்க்கும்போது மேற்படி அசல் வழக்கில் சாட்சிகளை தீர விசாரணை செய்து வழக்கு ஆவணங்களை குறியீடு செய்து தீர்வு கண்டால் நீதிக்கும், நியாயத்திற்கும் உகந்ததாக இருக்கும், மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்களை மனுதாரரே கையொப்பம் போட்டு அசல் வழக்கின் எதிர் நடவடிக்கைக்காக உருவாக்கிய ஆவணங்கள் என்றும், அதனையே தற்சமயம் தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறியுள்ளதை பார்க்கும்போது அசல் வழக்கில் ஆவணங்களை குறியீடு செய்து விசாரணை செய்தால் வழக்கின் உண்மை தன்மை தெரியவரும். மேலும் இதுபோன்ற வழக்குகள் பெருகுவதை தடுக்கவும், மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது என்பதால் மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து இம்மனுவில் முடிவு காணப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 15.09.2025 இன்று பகரப்பட்டது.

A TAMILSELVAN Digitally signed by A TAMILSELVAN Date: 2025.09.15 17:28:29 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை.

A TAMILSELVAN Digitally signed by A TAMILSELVAN Date: 2025.09.15 17:28:34 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.